ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
திகதி 27.01.2015

## நாணயக் கொள்கை மீளாய்வு – 2015 சனவரி

2014 திசெம்பரில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையிலான முதன்மைப் பணவீக்கம் முன்னைய மாதத்தின் 1.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2.1 சதவீதமாகக் காணப்பட்டது. விலை அழுத்தங்களினை நேரடியாக அளவிடும் முதன்மைப் பணவீக்கம், 3 – 4 சதவீதத்தில் தொடர்ச்சியாகக் காணப்பட்ட வேளையில் 2014 திசெம்பரில் முன்னைய ஆண்டு நவெம்பரின் 3.6 சதவீதத்திலிருந்து 3.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. பொருளாதாரத்தின் விலை அழுத்தங்கள் சுருக்கமடைந்தமைக்கு குறைந்த பணவீக்கம் முக்கிய பங்களித்த வேளையில, சாதகமான வழங்கல்பக்க அபிவிருத்திகளுக்கு குறிப்பாக, 2014இன் இறுதி சில மாதங்களில் உள்நாட்டு வலு விலைகளின் கீழ் நோக்கிய திருத்தங்கள் உதவின. பொருளாதாரத்தின் மெதுவடைந்த கேள்வி அழுத்தங்கள் மற்றும் பணவீக்க எதிர்பார்க்கைகள், 2015 சனவரியில் எரிபொருள் விலைகள் மேலும், குறைவடைந்தமையின் சாதகமான தாக்கம், அரசாங்கத்தின் '100 – நாள் நிகழ்ச்சித்திட்டத்தில்' அறிவிக்கப்பட்ட ஏனைய முக்கிய பொருட்களின் நிர்வகிக்கப்பட்ட விலைகளின் குறைப்பு எதிர்பார்க்கைகள் என்பன எதிர்வரும். சில மாதங்களில் பணவீக்கத்தினை மேலும் குறைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

பெயரளவு நியதிகளில், வரலாற்றிலேயே குறைந்த சந்தை வட்டி வீதத்தினால் உதவப்பட்டு, வர்த்தக வங்கிகளிடமிருந்து தனியார் துறையினரால் பெற்றுக் கொண்ட கொடுகடன் தொடர்ந்தும் ஆரோக்கியமாக விரிவடைந்தது. 2014 நவெம்பரில் தனியார் துறைக்கான கொடுகடன் உட்பாய்ச்சல்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 6.5 சதவீதத்தினால் அதிகரித்தவேளையில், உண்மை நியதிகளில் இவ்வதிகரிப்பு இம்மாத காலப்பகுதியில் ரூ.57.8 பில்லியனாக அதிகரித்து, 2014 சனவரி – நவெம்பர் காலப்பகுதியில் தனியார் துறைக்கான ஒன்றுசேர்ந்த கொடுகடன் ரூ.147.4 பில்லியனாகக் காணப்பட்டது. அசையாச் சொத்து, பொறி முற்றும் இயந்திரம், தனிப்பட்ட உத்தரவாதங்கள் மற்றும் வாக்குறுதிப் பத்திரங்கள், ஏனைய பிணையங்கள் அத்துடன் பிணையிடப்படாத கடன்கள் என்பன 2014 நவெம்பரில் கணிசமானளவில் அதிகரித்தன. தனியார் துறை கொடுகடன் பகிர்ந்தளிப்புக்களின் அதிகரித்துச் செல்லும் போக்கு 2015 ஆண்டு முழுவதும்

நிலைத்திருக்குமென எதிர்பார்க்கப்படுவதுடன் இது பொருளாதாரத்தின் வளர்ச்சி உத்வேகத்திற்கு அவசியமான தூண்டுதலகளினை வழங்குகிறது.

உண்மைத் துறையை நோக்குகையில், 2014இன் மூன்றாம் காலாண்டுப் பகுதியில் கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளின் பலமான செயலாற்றத்தினால் உதவப்பட்டு இலங்கைப் பொருளாதாரம் 7.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. 2014இன் முதலரையாண்டில் 12.4 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்த கைத்தொழில் துறை, மூன்றாம் காலாண்டில் 12.6 சதவீதமானதொரு விரிவாக்கத்தினை பதிவு செய்து அதன் வளர்ச்சி உத்வேகத்தைப் பேணியது. கைத்தொழில் துறையின் செயலாற்றமானது கட்டடவாக்கம், தயாரிப்பு மற்றும் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் போன்ற துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியின் மூலம் ஆதரவளிக்கப்பட்டது. அதேவேளை, பணிகள் துறையானது 7.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த வேளையில், காலநிலை தொடர்பான குழப்பங்களினால் பாதிக்கப்பட்ட வேளாண்மைத் துறையானது 2.0 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நம்பிக்கையினை ஊக்கப்படுத்துவதற்குத் தேவையான பேரினப் பொருளாதாரக் கொள்கைகள் மூலம் எதிர்வரும் காலங்களில் இலங்கையின் பொருளாதாரம் வலுவானதொரு செயலாற்றத்தினைப் பதிவு செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.

பொருளாதாரத்தின் மேற்கூறப்பட்ட அபிவிருத்திகளைக் கவனத்தில் கொண்ட நாணயச் சபை 2015 சனவரி 26ஆம் நாளன்று நடாத்திய அதன் கூட்டத்தில் தற்போதைய நாணயக் கொள்கை நிலை பொருத்தமானது என்ற நிலைப்பாட்டினைக் கொண்டிருந்தது. இதன்படி, நாணயச் சபை மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் வழங்கல் வசதி வீதம் என்பவற்றினை அவற்றின் தற்போதைய மட்டங்களான முறையே 6.50 சதவீதம் மற்றும் 8.00 சதவீதத்தில் மாற்றமின்றி பேணுவதனைத் தீர்மானித்தது. துணைநில் வைப்பு வசதி ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டதொன்றாகத் தொடர்ந்தும் விளங்கும்.

நாணயக் கொள்கை மீதான அடுத்த கிரமமான அறிக்கை வெளியிடப்படும் திகதி காலக்கிரமத்தில் அறிவிக்கப்படும்.

| நாணயக் கொள்கைத் தீர்மானம் | கொள்கை வீதங்கள் மாற்றமடையவில்லை |
|---|---|
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 6.50% |
| துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் | 8.00% |
| நியதி ஒதுக்கு விகிதம் | 6.00% |